1979 மார்ச் 3]

விடை

(அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து சுமார் ரூ. 60,000 மதிப்பீட்டில் பாலம் கட்டும் வேலையை செயல்படுத்தும்படி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(2) அறிவிப்பு

மேலவையில் நிறைவேற்றப்பெற்ற சட்ட முன்வடிவுகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓா அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன் வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது :

1. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1979).

2. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1979).

3. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்2/1979).

4. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979).